**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 3 February 2017

# மூத்தோர் வாழ்நாள் கற்றல் பற்றி புதிய ஆய்வு

மூத்தோருக்கான வாழ்நாள் கற்றலுக்கும் அவர்களுடைய சுகாதார நிலைக்கும் இடையே உள்ள தொடர்பை ஆராய சுகாதார அமைச்சும் டியுக்–என்யுஎஸ் மருத்துவப் பள்ளியின் மூப் படைதலுக்கான ஆய்வு மற்றும் கல்வி நிலையமும் சேர்ந்து பணியாற்றி வருவதாக சுகாதார மூத்த துணை அமைச்சர் ஏமி கோர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு $3 பில்லியன் செலவில் துவங்கப்பட்ட வெற்றிகரமாக மூப்படைதலுக்கான செயல் திட்டம் குறித்து மேல் விவரம் கொடுத்த அவர், தேசிய மூத்தோர் பயிலகத்தை மேம்படுத்த ஆய்வின் முடிவுகள் பயன் படுத்தப்படும் என்றார்.

பயிலகம் கடந்த ஆண்டு மே மாதம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை 5,000க்கு மேற்பட்ட மூத்தோர், வகுப்புகளுக்குப் பதிவு செய்துள்ளனர்.

இவ்வாண்டு 700 பாடத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன. இது கடந்த ஆண்டு வழங்கப் பட்ட 500 பாடத்திட்டங்களைவிட அதிகம். மேலும் இவ்வாண்டு இறுதிக்குள் கூடுதலாக 4,000 இடங்கள் வழங்கப்படும். இதன் மூலம் இவ்வாண்டு மொத்தம் 14,000 இடங்கள் வழங்கப்படும்.

பயிலகத்தை இன்னும் மேம்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறிய 12 மாத காலகட்டத்தில் வகுப் புகளுக்குப் பதிவு செய்துகொண்ட 50 வயதுக்கு மேற்பட்ட சிங்கப்பூரர்களிடம் ஆய்வு மேற்கொள்ளும். நான்கு காலகட்டங்களில் அவர்கள் நேரடியாகக் கேள்வி பதில் ஆய்வுகளில் கலந்து கொண்டு கருத்துகளைத் தெரிவிப்பர்.

மூத்தோருக்கான வாழ்நாள் கற்றல் குறித்த கொள்கைகள், நடைமுறைகள் மீதான பரிந்துரைகள் பின்னர் சுகாதார அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படும்.

செயல் திட்டத்தின்கீழ் உள்ள 70 திட்டங்களில் ஒன்றானது அந்தப் பயிலகம். ஆக்கபூர்வமான கருத்துகள் கிடைத்ததும் மற்ற திட்டங்களும் மேம்படுத்தப்படும் என்றார் டாக்டர் கோர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.